தமிழ்நாடு அரசு

ஐந்தாம் வகுப்பு

இரண்டாம் பருவம்

தொகுதி - 1

தமிழ்

ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2019
திருத்திய பதிப்பு – 2020, 2025
மறு பதிப்பு – 2021, 2022, 2023, 2024

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24 × 7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

CHILD LINE 1098 NIGHT & DAY

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?
அழையுங்கள் 14417
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

14417
கல்வித் தகவல் மையம்

5th_STD_Tamil_Term 2.indd 2 6/4/2025 12:53:00 PM

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும்** அமைந்ததொரு **குடியரசாக நிறுவவும்,**

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல், **நீதி;**

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை;**

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை**

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்

தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,

ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

5th_STD_Tamil_Term 2.indd 3 6/4/2025 12:53:01 PM

முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அ.ஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்காணும் நோக்கங்களை அடைந்திட பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

5th_STD_Tamil_Term 2.indd 4 6/4/2025 12:53:01 PM

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!




5th_STD_Tamil_Term 2.indd 5 6/4/2025 12:53:02 PM

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பாதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும். பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

5th_STD_Tamil_Term 2.indd 6 6/4/2025 12:53:02 PM



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

5th_STD_Tamil_Term 2.indd 7 6/4/2025 12:53:02 PM

அழகிய தமிழில் அறிவுக்கருவூலம்; அடிப்படைத் திறன்களின் வளர்நிலைப் பெட்டகம்; உயர்தொடக்க நிலைக்கு உதவும் கற்றல் ஏணியாய் இப்பாடநூல்



கற்பதனால்...
பாடப்பொருள் சார்ந்த குறிக்கோள்கள்



கற்பவை கற்றபின்
பாடப்பகுதிக்கு வலிமை சேர்க்கும் செயல்பாடுகள்



மதிப்பீடு
கற்றல் அடைவை அளவிடும் கருவி



சிந்தனை வினா
பாடப்பொருள் சார்ந்த விரிவான பார்வை



மொழியை ஆள்வோம்
மொழித்திறனை மேம்படுத்தும் செயல்பாடுகள்



மொழியோடு விளையாடு
ஆர்வமூட்டும் மொழி விளையாட்டுகள்



நிற்க அதற்குத் தக
கற்றுக்கொண்டதன் வெளிப்பாடு



செயல்திட்டம்
கற்ற கல்வியை வாழ்க்கையோடு தொடர்புபடுத்தும் செயல்கள்

5th_STD_Tamil_Term 2.indd 8 6/4/2025 12:53:03 PM

தமிழ்

பொருளடக்கம்

இயல்	பொருண்மை	தலைப்பு	பக்கம்	மாதம்
1	நாகரிகம்/ பண்பாடு	திருக்குறள்	1	நவம்பர்
		தமிழர்களின் வீரக்கலைகள்	4	
		கங்கை கொண்ட சோழபுரம்	11	
		இணைப்புச்சொற்கள்	15	
2	தொழில்/ வணிகம்	உழவுப் பொங்கல்	20	டிசம்பர்
		விதைத் திருவிழா	23	
		எது சிறந்தது?	30	
		அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி	34	
		அகரமுதலி	42	



W2TYL
மின்னூல்

T3CLO
மதிப்பீடு

5th_STD_Tamil_Term 2.indd 9 6/4/2025 12:53:03 PM

தமிழ்

ஐந்தாம் வகுப்பு

இரண்டாம் பருவம்

தொகுதி - 1



5th_STD_Tamil_Term 2.indd 10 6/4/2025 12:53:03 PM

இயல் ஒன்று

நாகரிகம்/ பண்பாடு

கற்பதனால்...

- திருக்குறள் கருத்துகளை அறிந்து பின்பற்றுவர்.
- தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டுகள், வீரக்கலைகளை அறிந்துகொள்வர்.
- தமிழர் கட்டடக்கலை, சிற்பக்கலை குறித்து அறிந்துகொள்வர்.
- உரையாடல்களிலும், எழுத்திலும் இணைப்புச்சொற்களைப் பயன்படுத்துவர்.

Y5Do2

செய்யுள்

திருக்குறள்

பண்புடைமை

1 நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

பொருள் விளையாட்டாகக் கூட ஒருவரை இகழ்ந்து பேசினாலும் கேடு உண்டாக்கும். பிறரின் இயல்பு அறிந்து நடக்கும் அறிவு மிக்கவர்கள் பகைவரிடமும் பண்பு கெடாமல் நடந்து கொள்வார்கள்.

சொல்பொருள் இகழ்ச்சி – இகழ்தல்; பாடறிவார் – பிறரின் இயல்பு புரிந்து நடப்பவர்.

2 நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு.

பொருள் நேர்மையையும் நன்மையையும் விரும்பி, பிறருக்குப் பயன்படும்படி வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

சொல்பொருள் நயன் – நேர்மை; நன்றி – நன்மை

5th_STD_Tamil_Term 2.indd 1 6/4/2025 12:53:04 PM

❸ பண்புஉடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுஇன்றேல்

மண்புக்கு மாய்வது மன்.

பொருள் நற்பண்பு உடையவர் செய்யும் நல்ல செயல்களாலேயே இவ்வுலகம் இயங்குகிறது. இல்லையெனில், அது மண்ணோடு மண்ணாகி அழிந்துவிடும்.

சொல்பொருள் புக்கு – புகுந்து; மாய்வது – அழிவது

❹ அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்

மக்கட்பண்பு இல்லா தவர்.

பொருள் அரத்தைப்போல் கூர்மையான அறிவு உடையவரானாலும் மனிதப்பண்பு இல்லாதவர், மரத்தைப் போன்றவரே ஆவர்.

சொல்பொருள் அரம் – வாளைக் கூர்மையாக்கும் கருவி; போல்வர் – போன்றவர்

❺ பண்புஇலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்

கலம்தீமை யால்திரிந் தற்று.

பொருள் பண்பு இல்லாதவன் பெற்ற பெருஞ்செல்வமானது, தூய்மையற்ற பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிவது போன்றதாகும்.

சொல்பொருள் பெருஞ்செல்வம் – மிகுந்த செல்வம்; நன்பால் – நல்ல பால்

நூல்குறிப்பு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று, திருக்குறள். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பிரிவுகளை உடையது. இதில் 133 அதிகாரங்களும் 1330 குறட்பாக்களும் உள்ளன. உலகிலுள்ள அனைவரும் பின்பற்றத்தக்க சிறந்த அறநெறிக் கருத்துகள் இந்நூலில் உள்ளதால், இது உலகப்பொதுமறை எனப் போற்றப்பெறுகிறது. இந்நூலை இயற்றியவர், திருவள்ளுவர்.



கற்பவை கற்றபின்

- செய்யுளைச் சரியான ஒலிப்புடன் படித்து மகிழ்க.
- நம்மிடம் இருக்கவேண்டிய நற்பண்புகளைப் பட்டியலிடுக.
- பண்பா? பணமா? எதற்கு முதன்மையளிக்க வேண்டும்? உரை தயாரித்துப் பேசுக.

5th_STD_Tamil_Term 2.indd 2 6/4/2025 12:53:04 PM

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

1. **இகழ்ச்சி** இச்சொல்லின் பொருள் _____

அ) இரத்தல் ஆ) உயர்தல் இ) இகழ்தல் ஈ) மகிழ்தல்

2. **பெருஞ்செல்வம்** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) பெருஞ் + செல்வம் ஆ) பெரும் + செல்வம்

இ) பெருமை + செல்வம் ஈ) பெரு + செல்வம்

3. **பண்புடைமை** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது. _____

அ) பண் + புடைமை ஆ) பண்பு + புடைமை

இ) பண்பு + உடைமை ஈ) பண் + உடைமை

4. **மரம் + போல்வர்** இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) மரபோல்வர் ஆ) மரமேல்வர்

இ) மரம்போல்வர் ஈ) மரப்போல்வர்

5. செய்யுளில், **நேர்மை** என்னும் பொருள் தரும் சொல் _____

அ) நயன் ஆ) அரம் இ) பகை ஈ) நன்பால்

ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1) இவ்விரண்டும் = _____ + _____

2) மக்கட்பண்பு = _____ + _____

இ. செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

_____ _____ _____ _____

ஈ. அன்புடைமை, பண்புடைமை என்பன போல் ஈற்றில் 'மை' என முடியும் நான்கு சொற்களை எழுதுக.

_____ _____ _____ _____

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பாடறிவார் எவ்வாறு நடந்துகொள்வர்?
2. 'மரம் போன்றவர்' எனத் திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?
3. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எதைப் போன்றது?

ஊ. சிந்தனை வினா

1. ஒருவர் என்னென்ன பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

5th_STD_Tamil_Term 2.indd 3 6/4/2025 12:53:04 PM

இயல் ஒன்று

தமிழர்களின் வீரக்கலைகள்

உரைநடை

தனக்கென்று தனித்த நாகரிகமும் பண்பாடும் உடையது தமிழ் மரபு. தமிழரின் பண்பாட்டுக் கூறுகளும் கலைகளும் இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பண்டைத்தமிழர், வாளாண்மையால் பகைவரை வென்றனர். தாளாண்மையால் நன்னிலம் ஆக்கினர். வேளாண்மையால் வளம் பெருக்கினர். வீரமும் தீரமும் நிறைந்த விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கினர். தமிழர்க்கென்றே இருக்கும் வீரம் செறிந்த கலைகளை அறியும்போது வியப்பு மேலிடும்; மனம் மகிழ்ச்சியில் நிறைந்திடும்.

ஏறு தழுவுதல், சிலம்பாட்டம், இளவட்டக்கல் தூக்குதல், மற்போர் முதலான கலைகள் தமிழர்களின் வீரக்கலைகளாக விளங்குகின்றன. இக்கலைகளுள் இன்றளவும் நடைமுறையில் உள்ள சில விளையாட்டுகளைப் பற்றி அறிந்துகொள்வோம்.

ஏறு தழுவுதல்



தமிழரின் வீரத்தைப் பறைசாற்றும் விளையாட்டுகளுள் ஒன்று, ஏறுதழுவுதல். ஏறு என்பது, காளை மாட்டைக் குறிக்கும். ஏறு தழுவுதல் என்பது, காளையைத் தழுவி, அதன் வீரத்தை அடக்குவதாகும். இவ்விளையாட்டு, பழங்காலந்தொட்டு இன்றுவரை விளையாடப்பட்டு வருகிறது. இன்று பல மாவட்டங்களில் இவ்வீர விளையாட்டு நடைபெறுகிறது. பொங்கல் திருவிழா கொண்டாடப்படும் நாள்களில் ஏறுதழுவுதல் என்னும் இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது. ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு எனப் பல பெயர்களிலும் இது அழைக்கப்படுகிறது.

இவ்விளையாட்டில் பங்குபெறும் காளைக்கு அதன் கன்றுப் பருவத்திலிருந்தே பயிற்சி அளிக்கப்படுகிறது. காளையின் கொம்பில் ஜல்லிக்கட்டுத் துணி கட்டப்பட்டிருக்கும் அதனை எடுப்பவரே வெற்றி பெற்றவராகக் கருதப்பட்டார்.

இத்தகைய வீர விளையாட்டை விளையாடுவதற்குச் சில விதிமுறைகள் இன்று பின்பற்றப்படுகின்றன. தற்காலத்தில் போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள் மற்றும்

5th_STD_Tamil_Term 2.indd 4 6/4/2025 12:53:04 PM

காளைகளுக்கு உடல் பரிசோதனை செய்யப்படுகிறது. போட்டி நடைபெறும்போது வாடிவாசலை மறித்துக்கொண்டு போட்டியாளர்கள் நிற்கக்கூடாது. காளையின் திமில் பகுதியைப் பிடித்தபடி 15 மீட்டர் தூரம் அல்லது 30 வினாடிகள் அல்லது மூன்று துள்ளல்கள்வரை ஓடும் போட்டியாளர் வெற்றி பெற்றவர் ஆவார். இவ்விளையாட்டில் ஈடுபடுவதற்கு நல்ல உடல் திறனும் அஞ்சா நெஞ்சமும் தேவை.

சிலம்பாட்டம்



தமிழர்களின் மற்றொரு வீர விளையாட்டு, சிலம்பம். சிலம்பு என்றால் ஒலித்தல் என்பது பொருள். கம்பு சுழலும்போது ஏற்படும் ஓசையை அடிப்படையாகக் கொண்டே சிலம்பம் எனப் பெயரிட்டனர். **கம்பு சுழற்றுதல்** என்னும் பெயரும் இதற்கு உண்டு. தற்காப்புக்காகத் தோன்றிய இக்கலை, இன்று வீர விளையாட்டாக அறியப்படுகிறது.

எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல் எதிராளியின் உடலில் சிலம்புக் கம்பினால் தொடுதல் போன்றவை சிலம்பாட்டத்தின் அடிப்படையாகும். இதற்கான கம்பு நன்கு வளைந்து கொடுக்கக்கூடிய 'சிறுவாரைக்கம்பு' என்னும் மூங்கில் இனத்திலிருந்து செய்யப்படுகிறது.

சிலம்பக் கலையில் மான்கொம்பு, பிச்சுவா கத்தி, சுருள்பட்டா, வளரி போன்ற ஆயுதங்களையும் பயன்படுத்துவர். மனத்தை ஒருங்கிணைக்கும் இவ்விளையாட்டு, தமிழரின் வீரத்திற்கும் நுட்பமான செயல்திறனுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

5th_STD_Tamil_Term 2.indd 5 6/4/2025 12:53:05 PM



வில்வித்தை

வித்தை என்பது, வியப்படையச் செய்யும் வகையில் நிகழ்த்தப்படும் ஒரு செயல். அவற்றுள் வில் வித்தையும் ஒன்று. பண்டைத் தமிழர் விரும்பிக் கற்றுக்கொள்ளும் விளையாட்டாக வில்வித்தை விளங்கியது. தொடக்கத்தில் அம்பை எய்து விலங்குகளை வேட்டையாடவும் போர்முனைகளில் எதிரிகளை வெல்லவும் இத்தகு வில்லாற்றல் பயன்பட்டது.

இன்று வில்வித்தை, ஒலிம்பிக் போட்டிகளில் சேர்க்கப்பட்டுள்ளமை தமிழர் கலைகளுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

மற்போர்

படைக்கலன்கள் ஏதுமின்றி இருவர் போரிடும் விளையாட்டே மற்போர். மல் என்பது, வலிமையைக் குறிக்கும். ஒருவர் தனது உடல் வலிமையால் செய்யும் போரே 'மற்போர்'. மற்போரில் வெற்றி பெற்றவர்களை 'மல்லர்' என்னும் சொல்லால் குறிக்கும் வழக்கம் இருந்தது. மற்போரில் சிறந்து விளங்கிய காரணத்தால் மாமல்லர் என்று அக்கால அரசர்கள் போற்றப்பெற்றனர்.



5th_STD_Tamil_Term 2.indd 6 6/4/2025 12:53:06 PM

இருவர் கைகோத்துக் கால்களாலும் தலையாலும் இடித்தும் உதைத்தும் ஒருவருடன் ஒருவர் போர் செய்வதே மற்போர். பகைவரை எதிர்கொள்ளும் வகையில் விளங்கிய இம்மற்போர், பின்னர் வீரவிளையாட்டாக மாறியது. நம் நாட்டில் ஒவ்வொரு மாநிலத்திலும் மற்போர் கழகங்கள் உள்ளன. ஒலிம்பிக் போட்டிகளில் மற்போரும் ஒன்றாக இருந்து வருகின்றது.

மேலும், பல விளையாட்டுகள், பண்டைக் காலம் முதல் இன்றுவரை வழக்கில் இருந்து வருகின்றன. வழுக்குமரம், நீர் விளையாட்டு, கபடி என்கின்ற சடுகுடு போன்ற பல விளையாட்டுகளை நாம் இப்போதும் விளையாடி மகிழ்கிறோம். உடலில் வலிமையும் உள்ளத்தில் மகிழ்ச்சியும் விளையாட்டால் ஏற்படுகின்றது. பள்ளிப் பருவத்திலிருந்தே நமக்குப் பிடித்த விளையாட்டுகளை விளையாடி மகிழ்வோம். விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொள்வோம்.

கற்பவை கற்றபின்

- உங்கள் ஊரில் விளையாடும் விளையாட்டுகளைப் பற்றிப் பேசுக.
- உங்களுக்குப் பிடித்த விளையாட்டுகள் எவை? ஏன்?
- விழாக்காலங்களில் ஊர் கூடி விளையாடும் விளையாட்டுகள் எவை? அவற்றைப் பற்றி உங்களுடைய கருத்துகளைக் கூறுக.

படித்து அறிக

பொதுமக்களுக்கு ஒரு நற்செய்தி

வரும் பொங்கல் திருவிழா அன்று மாலை 4.00 மணியளவில் பூங்காநகர் திடலில் சிலம்பாட்டம் நடைபெற உள்ளது. விருப்பமுள்ளவர்கள் நிகழ்ச்சிப் பொறுப்பாளர் திரு. மணி அவர்களிடம் பெயரைப் பதிவு செய்துகொள்ளுமாறு ஊராட்சி சார்பில் தெரிவிக்கலாகிறது.

5th_STD_Tamil_Term 2.indd 7 6/4/2025 12:53:06 PM

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

1. தமிழரின் வீர விளையாட்டுகளுள் ஒன்று _____

அ) சிலம்பாட்டம்
ஆ) பல்லாங்குழி
இ) மட்டைப்பந்து
ஈ) கூடைப்பந்து

2. மஞ்சு விரட்டு என்பதைக் குறிக்கும் விளையாட்டு _____

அ) மற்போர்
ஆ) ஏறுதழுவுதல்
இ) சிலம்பாட்டம்
ஈ) வில்வித்தை

3. தற்காப்பு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) தற் + காப்பு
ஆ) தனி + காப்பு
இ) தன் + காப்பு
ஈ) தண் + காப்பு

4. மல் + போர் இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) மறுபோர்
ஆ) மல்போர்
இ) மற்றோர்
ஈ) மற்போர்

5. ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ள கலை _____

அ) சிலம்பாட்டம்
ஆ) வில்வித்தை
இ) ஏறுதழுவுதல்
ஈ) வழுக்கு மரம் ஏறுதல்

5th_STD_Tamil_Term 2.indd 8 6/4/2025 12:53:06 PM

ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1) சிலம்பு + ஆட்டம் = _____

2) வீரம் + கலை = _____

இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1) தனக்கென்று = _____ + _____

2) கொடைத்திறம் = _____ + _____

ஈ. பொருத்துக.

1. காளை	–	வளரி
2. சிலம்பக்கலை	–	உழவு
3. சிறுவாரைக்கம்பு	–	திமில்
4. வேளாண்மை	–	மூங்கில்

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. தமிழர்களின் வீரக்கலைகளுள் இரண்டைக் குறிப்பிடுக.

2. ஏறுதழுவுதல் என்றால் என்ன?

3. சிலம்பாட்டம் – பெயர்க்காரணம் தருக.

4. மற்போர் எவ்வாறு நடைபெறுகிறது?

ஊ. சிந்தனை வினா

1. 'சிலம்பாட்டம்' தற்காப்புக்கலை என அழைக்கப்படுவது ஏன்?

5th_STD_Tamil_Term 2.indd 9 6/4/2025 12:53:06 PM

பின்வரும் பாடப் பகுதியை உரிய ஒலிப்புடன் பொருள் விளங்கவும் விரைவாகவும் படித்துக் காட்டுக.

தமிழரின் வீரத்தைப் பறைசாற்றும் விளையாட்டுகளுள் ஒன்று, ஏறுதழுவுதல். ஏறு என்பது, காளை மாட்டைக் குறிக்கும். ஏறு தழுவுதல் என்பது, காளையைத் தழுவி, அதன் வீரத்தை அடக்குவதாகும். இவ்விளையாட்டு, பழங்காலந்தொட்டு இன்றுவரை விளையாடப்பட்டு வருகிறது. இன்று பல மாவட்டங்களில் இவ்வீர விளையாட்டு நடைபெறுகிறது. பொங்கல் திருவிழா கொண்டாடப்படும் நாள்களில் ஏறுதழுவுதல் என்னும் இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது. ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு எனப் பல பெயர்களிலும் இது அழைக்கப்படுகிறது.

படித்த பகுதியின் மையக்கருத்தை ஓரிரு வரிகளில் உன் சொந்த நடையில் எழுதுக.

வண்ணமிடப்பட்ட சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.

_____ _____ _____

_____ _____ _____

_____ _____ _____

5th_STD_Tamil_Term 2.indd 10 6/4/2025 12:53:06 PM

இயல் ஒன்று

கங்கை கொண்ட சோழபுரம்

துணைப் பாடம்

கயலினி மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தாள். தன் பாட்டியுடன் பேருந்தில் ஏறி அமர்ந்தாள். வழியெல்லாம் ஒரே பாட்டுத்தான். எங்கே செல்கிறார்கள் தெரியுமா ?

பாட்டியும் கயலினியும் கங்கைகொண்ட சோழபுரம் செல்கிறார்கள்.

"பாட்டி ... பாட்டி ... நாம் செல்லும் ஊரின் பெயர் இவ்வளவு பெரியதாக இருக்கிறது ஏன் பாட்டி?" என்று கேட்டாள்.

"ஓ... அதுவா! முதலாம் ராசேந்திர சோழன் என்றொரு மன்னர் இருந்தார். அவர் வடநாடு சென்று பகைவர்களை வென்றார். அங்கிருந்து கங்கை நீரைக் கொண்டு வந்தார். அதனால்தான் அம்மன்னரைக் கங்கைகொண்டான் என்கிறோம். வெற்றியைக் கொண்டாட ஒரு நகரை உருவாக்கினார். அந்நகருக்குக் கங்கைகொண்ட சோழபுரம் என்று பெயர்" என்றார் பாட்டி.

செல்லும் வழியில் ஒரு பெரிய ஏரியைக் கண்டனர். "இதுதான் சோழகங்கம். பார்த்தாயா? இதன் அழகை!" என்றார் பாட்டி .



"பாட்டி இங்கே பொன்னேரின்னு எழுதியிருக்கே. நீங்க சோழகங்கம்னு சொல்றீங்க? என்று கேட்டாள் கயலினி. ஆமாம், சோழ கங்கம் பேரேரிதான் இன்று பொன்னேரி என்று மாறியிருக்கு. சுற்றியுள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இந்த ஏரியின் மூலம் பாசன வசதி பெறுகின்றன. இதனால் உழவுத்தொழில் செழிப்பாக இருக்கிறது" என்றார் பாட்டி .

"இங்கே பார்த்தாயா? இது மலைகளும் குன்றுகளும் இல்லாத சமவெளிப் பகுதி பதினாறு கல் தொலைவு வரை வலிமையான, உயரமான கரைகளைக் கட்டியுள்ளனர். நீண்ட கால்வாய் வெட்டி, தண்ணீரைப் பள்ளத்தாக்கிலிருந்து மேட்டிற்குக் கொண்டு வந்துள்ளனர். தண்ணீரை ஏரியில் தேக்கி வைத்துள்ளனர்." என்று பாட்டி கூற, சோழர்களின் நீர்ப்பாசன முறையை எண்ணி வியந்து போனாள் கயலினி.

"ஓ! அப்படியா? நம் ஊருக்கு இப்படித்தான் பெயர் வந்ததா?"

5th_STD_Tamil_Term 2.indd 11 6/4/2025 12:53:07 PM



இருவரும் கங்கைகொண்ட சோழபுரத்தை அடைந்தார்கள். "இக்கோவில் தஞ்சைப் பெரிய கோவில் போன்றே உள்ளதே?" வியப்புடன் கேட்டாள் கயலினி.

"ஆமாம், அதே அமைப்பில்தான் கட்டப்பட்டுள்ளது. ஆனால் ராசேந்திரனின் தந்தை ராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவிலைவிடச் சற்று உயரம் குறைவானது" என்றார் பாட்டி .

"அது என்ன பாட்டி?" என்று கேட்டாள் கயலினி.

"அதை விமானம் என்று அழைக்கிறார்கள். அதன் உச்சியில் இருப்பது மிகப்பெரிய வட்ட வடிவக் கல். அது 34 அடி குறுக்களவு கொண்டது. மேலும் இது துண்டுக் கற்களால் அமைக்கப்பட்ட விமானம்" என்று கூறினார் பாட்டி.



கயலினி ஓடிப்போய் நந்தியைத் தொட்டுப் பார்த்தாள். "இது கல்லால் செய்யப்பட்டதுதானே?" என்று கேட்டாள்.

"இல்லை, கயலினி இது முழுவதும் செங்கற்களால் கட்டப்பட்டது" என்றார் பாட்டி .

"கோவிலின் வாயில் தரையிலிருந்து இவ்வளவு உயரத்தில் உள்ளதே!" என்று வியந்தாள் கயலினி.

"ஆமாம் தரை மட்டத்திலிருந்து 20 அடி உயரத்தில் இருப்பதே இதன் சிறப்பு" என்ற பாட்டி, கயலினியை உள்ளே அழைத்துச் சென்றார்.

படியைக் கடந்து ஏறியதும் வாயிற்காவலர் சிலைகளையும் தூண்களிலும் கோவில்களிலும் இருந்த சிற்பங்களையும் கண்டுகளித்தாள் கயலினி. கோவிலின் வடக்குப்பக்க நுழைவாயிலின் இருபக்கங்களிலும் உள்ள கலைச்செல்வி மற்றும்

5th_STD_Tamil_Term 2.indd 12 6/4/2025 12:53:07 PM

சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தி ஆகிய சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை என்பதைப் பாட்டி மூலம் அறிந்து கொண்டாள்.



"பாட்டி, இங்கே பாருங்க, சிங்கம் போன்ற வடிவத்திலிருக்கும் இந்தச் சிற்பத்தின் வயிற்றிலே ஒரு வாயில் இருக்கிறதே" என்றாள் கயலினி.

அதற்குப் பாட்டி, "அதுதான் சிங்கமுகக் கிணறு" என்றார். "என்னது? சிங்கத்தின் வயிற்றுக்குள் கிணறா?" என்று தன் இரு கைகளையும் கன்னத்தில் வைத்தபடி சோழர்களின் கலைத்திறனை எண்ணி வியந்தாள். தமிழர்களின் கலைத் திறமையைக் கண்டு உள்ளம் மகிழ்ந்த அவள், அக்கலைக்கூடத்தைவிட்டு வெளியே வர மனமில்லாமல் பாட்டியுடன் வீடு வந்து சேர்ந்தாள்.

அறிந்து கொள்வோமா?

இந்தியச் சிற்பக் கலை வரலாற்றில் கங்கை கொண்ட சோழபுரச் சிற்பங்கள் தமக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளன. கலையழகும் புதுப்பொலிவும் கொண்ட சிற்பக் கூடமாகவே கங்கை கொண்ட சோழபுரம் அமைந்துள்ளது. யுனெஸ்கோ (UNESCO) நிறுவனம் உலகப் பாரம்பரியச் சின்னமாகக் கங்கை கொண்ட சோழபுரத்தை அறிவித்துள்ளது நமக்கெல்லாம் பெருமைதானே!

கற்பவை கற்றபின்

- 'கங்கை கொண்ட சோழபுரம்' என்ற பாடப் பகுதியைச் சரியான ஒலிப்போடும் நிறுத்தக்குறிகளோடும் படித்துக்காட்டுக.
- கங்கை கொண்ட சோழபுரம் பாடப் பகுதியில் உள்ள விரைவுத்துலங்கல் குறியீட்டில் கொடுக்கப்பட்டுள்ள காணொலிகளைக் கண்டு வகுப்பறையில் கலந்துரையாடுக.

மதிப்பீடு

அ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. முதலாம் இராசேந்திர சோழன் ஏன் கங்கை கொண்ட சோழன் என்று அழைக்கப்படுகிறார்?
2. சிங்கமுகக் கிணறு – குறிப்பு எழுதுக.
3. சோழ கங்கம் பேரேரியின் சிறப்பு யாது?

ஆ. சிந்தனை வினா

1. உங்கள் ஊரின் சிறப்புகளாக நீங்கள் எவற்றைக் கூறுவீர்கள்?

5th_STD_Tamil_Term 2.indd 13 6/4/2025 12:53:07 PM

கங்கை கொண்ட சோழபுரம் என்ற பாடப்பகுதியில் நீங்கள் விரும்பிய பகுதி எது? ஏன்? ஓரிரு வரிகளில் எழுதுக.

பொன்னேரியின் சிறப்பு பற்றி உங்கள் சொந்த நடையில் எழுதுக.

இப்பாடப்பகுதிக்கு நீங்கள் விரும்பும் தலைப்பு

கையெழுத்துப் பயிற்சி

பாடப்பகுதியிலிருந்து ஏதேனும் இரண்டு தொடர்களைப் பார்த்து உரிய இடைவெளி விட்டு, நிறுத்தக்குறிகளுடன் தெளிவாக எழுதுக.

5th_STD_Tamil_Term 2.indd 14 6/4/2025 12:53:07 PM

கற்கண்டு

இணைப்புச்சொற்கள்

இரண்டு தொடர்களை இணைப்பதற்குப் பயன்படும் சொற்கள் இணைப்புச் சொற்கள் எனப்படும்.

- எழிலை அனைவருக்கும் பிடிக்கும். ஏனெனில், அவன் நற்பண்புகள் நிறைந்தவன்.
- நான் நன்றாக ஓவியம் தீட்டுவேன். அப்படியானால், இந்தப் போட்டியில் நான் பங்கு பெறலாமா?
- என் தந்தை போட்டிக்கு உரிய நேரத்திற்கு அழைத்து வந்தார். அப்படியில்லாவிட்டால், போட்டியில் கலந்து கொண்டிருக்க முடியாது.

மேற்கண்ட தொடர்களில் ஏனெனில், அப்படியானால், அப்படியில்லாவிட்டால் போன்றவை தொடர்களை இணைப்பதற்குப் பயன்படுகின்றன. இவை இணைப்புச் சொற்கள் எனப்படும்.

கற்பவை கற்றபின்

- புத்தகப் பூங்கொத்து கதையொன்றில் இடம்பெற்றிருக்கும் இணைப்புச்சொற்களைக் கண்டறிக.
- வீட்டிலோ பள்ளியிலோ பிறர் பேசும்போது, என்னென்ன இணைப்புச்சொற்களைப் பயன்படுத்துகின்றனர்? அவற்றைப் பட்டியலிடுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

1. அண்ணன் வீட்டிற்குத் தாமதமாக வந்திருந்தார். _____, அவர் மிதிவண்டி பழுதடைந்து இருந்தது.

   அ) ஆயினும் ஆ) எனவே இ) எனினும் ஈ) ஏனெனில்

2. நான் நன்றாகப் படித்துப் பயிற்சி எடுத்தேன். _____, முதல் மதிப்பெண் பெற்றிருக்க முடியாது.

   அ) ஆகையால் ஆ) அப்படியில்லாவிட்டால்

   இ) அப்படியானால் ஈ) ஏனெனில்

3. அம்மா இனிமையாகப் பாடுவார். _____, போட்டியில் பங்கு பெற முடியுமா?

   அ) ஏனெனில் ஆ) எனினும் இ) ஆயினும் ஈ) அப்படியானால்

5th_STD_Tamil_Term 2.indd 15 6/4/2025 12:53:07 PM

பின்வரும் பாடப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பாட்டி, "அதுதான் சிங்கமுகக் கிணறு" என்றார்.

"என்னது? சிங்கத்தின் வயிற்றுக்குள் கிணறா?" என்று தன் இரு கைகளையும் கன்னத்தில் வைத்தபடி சோழர்களின் கலைத்திறனை எண்ணி வியந்தாள். தமிழர்களின் கலைத் திறமையைக் கண்டு உள்ளம் மகிழ்ந்த அவள், அக்கலைக்கூடத்தைவிட்டு வெளியே வர மனமில்லாமல் பாட்டியுடன் வீடு வந்து சேர்ந்தாள்.

படித்த பகுதியில் இடம்பெற்றுள்ள...

பெயர்ச் சொற்கள்	
வினைச் சொற்கள்	
ஒருமைச் சொற்கள்	
பன்மைச் சொற்கள்	

படித்த பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள வண்ணமிடப்பட்ட சொற்களை எழுதுக. சொற்களில் இன எழுத்துகளுக்கு மட்டும் அடிக்கோடு இடுக.

எ.கா. என்றார்

5th_STD_Tamil_Term 2.indd 16 6/4/2025 12:53:07 PM

மொழியை ஆள்வோம்

அ. கேட்டல்

- வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வரும் கட்டடக்கலைகள் பற்றிய செய்திகளைக் கேட்டு அறிந்துகொள்க.

ஆ. பேசுதல்

- நீங்கள் கண்டுகளித்த சிறப்புமிக்க இடங்கள் குறித்து 5 மணித்துளி பேசுக.

இ. படித்தல்

- உங்களுக்குப் பிடித்த திருக்குறள்களைப் படித்துக்காட்டுக.
- புத்தகப் பூங்கொத்துக் கதைகளைப் படித்துக்காட்டுக.

ஈ. எழுதுதல்

1. சொல்லக் கேட்டு எழுதுக.

1. பண்பு உடையவராக வாழ்தல் நல்வழியாகும்.
2. திருக்குறள் "உலகப்பொதுமறை" என்றழைக்கப்படுகிறது.
3. கங்கை கொண்ட சோழபுரம் உலகப் பாரம்பரியச் சின்னமாகும்.

2. தொடரில் அமைத்து எழுதுக.

1. ஏனெனில் _____.
2. ஆயினும் _____.
3. அப்படியானால் _____.

3. நீங்கள் பார்த்து மகிழ்ந்த இடம் பற்றி உரை / கவிதை எழுதுக.

5th_STD_Tamil_Term 2.indd 17 6/4/2025 12:53:07 PM

4. பிறமொழிச் சொற்களையும் பேச்சுத்தமிழையும் நீக்கிச் சரியாக எழுதுக.

1. நான் ஊருக்கு பஸ்ல போனேன்.

   நான் ஊருக்குப் பேருந்தில் சென்றேன்.

2. நான் டெய்லி ஸ்கூலுக்கு சைக்கிள்ள வரேன்.

   _____.

3. என் பேக்குல புக்கு, நோட்புக்கு, பென் வச்சிருக்கேன்.

   _____.

5. சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

1. மைதானத்தில் மழைநீர் தேங்கி நிற்கிறது. _____, இன்று நம்மால் விளையாட முடியாதா?

   அ) ஆயினும் ஆ) எனவே இ) அப்படியானால் ஈ) ஏனெனில்


2. பேச்சுப் போட்டியும் ஓவியப் போட்டியும் ஒரே நேரத்தில் நடந்தன _____ நான் இரண்டிலும் கலந்து கொண்டிருப்பேன் / பங்கேற்றிருப்பேன்.

   அ) ஏனெனில் ஆ) அப்படியானால் இ) அப்படியில்லாவிட்டால் ஈ) எனவே

3. கருமேகங்கள் வானில் திரண்டன _____ மழை பெய்யவில்லை.

   அ) எனவே ஆ) ஆகையால் இ) ஏனெனில் ஈ) ஆயினும்

நிற்க அதற்குத் தக



- பிற உயிரினங்களின் மீது அன்பு காட்டுவேன்.
- விளையாட்டு, உடலுக்கும் மனத்திற்கும் நல்லது என அறிந்துகொண்டேன்.
- நீர்த்தேக்கங்கள், வேளாண்மைக்கு உயிர் என்பதைப் புரிந்துகொண்டேன்.

செயல்திட்டம்

நீங்கள் சென்று பார்த்து வந்த ஏதேனும் ஒரு இடம் பற்றி விவரித்து எழுதுக.



5th_STD_Tamil_Term 2.indd 18 6/4/2025 12:53:08 PM

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சூரியக் குடும்பத்தில் உள்ள 8 கோள்களுள் பூமியில் மட்டுமே உயிரினங்கள் வாழ்கின்றன. இத்தகு சிறப்புமிகு பூமியின் பாதுகாப்பை வலியுறுத்தி 1970ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் தேதி முதன்முதலில் பூமி நாள் கொண்டாடப்பட்டது. அன்றுமுதல் உலக அளவில் ஒவ்வொரு ஆண்டும் பூமி நாள் கொண்டாடப்படுகிறது. பூமி நாளன்று பசுமைப் பேரணிகள், சூழலியல் கண்காட்சிகள், கருத்தரங்கங்கள், ஓவியப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளைச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஏற்பாடு செய்வர். இந்நிகழ்வுகளின் வழியாக, பூமியைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவர்.



1) சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களின் எண்ணிக்கை _____

அ) 5 ஆ) 7 இ) 9 ஈ) 8

2) 'பூமி நாள்' முதன் முதலில் கொண்டாடப்பட்ட ஆண்டு

அ) 1980 ஆ) 1990 இ) 1970 ஈ) 1870

3) பூமி நாள் கொண்டாடப்படுவது _____

அ) ஏப்ரல் 22

ஆ) மார்ச் 22

இ) அக்டோபர் 22

ஈ) பிப்ரவரி 22

4) பூமி நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம்

அ) டெங்குவைத் தடுக்க

ஆ) தீ விபத்துகளைத் தவிர்க்க

இ) பூமியின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த

ஈ) சாலை விபத்துகளைத் தவிர்க்க

5) பூமியைப் பாதுகாப்பது தொடர்பாக ஒரு முழக்கத் தொடர் எழுதுக.

_____

5th_STD_Tamil_Term 2.indd 19 6/4/2025 12:53:08 PM

இயல் இரண்டு

தொழில்/ வணிகம்

கற்பதனால்...

- உழைப்பின் மேன்மையை உணர்வர்.
- உழவுத்தொழிலே உலகத்தின் அச்சாணி என்று புரிந்துகொள்வர்.
- அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி ஆகியவற்றை இடமறிந்து பயன்படுத்துவர்.

பாடல்

உழவுப் பொங்கல்

பொங்குக பொங்கல் பொங்குகவே
புதுவனம் நிறைந்தறம் தங்குகவே
எங்கணும் யாவரும் இன்பமுற
ஏர்த்தொழில் ஒன்றே தெம்புதரும்

உணவுப் பொருள்கள் இல்லாமல்
உயிரோ டிருப்பது செல்லாது
பணமும் அதுதரும் நலனெல்லாம்
பயிர்கள் விளைப்பதன் பலனேயாம்


உழவுத் தொழில்தான் உணவுதரும்
உடையும் அதனால் அணியவரும்
பழகும் மற்றுள தொழில்யாவும்
பயிர்த்தொழில் இன்றேல் விழலாகும்

தங்கமும் வெள்ளியும் இருந்தாலும்
தானியம் ஒன்றே விருந்தாகும்
இங்கிதன் உண்மையை உணர்ந்திடுவோம்
ஏர்த்தொழில் மிகுந்திடத் துணிந்திடுவோம்

உழவே செல்வம் உண்டுபண்ணும்
உழைப்பே இன்பம் கொண்டுவரும்
உழவைத் தொழுதிட வருநாளே
உற்றஇப் பொங்கல் திருநாளாம்

ஏழையும் செல்வரும் இங்கிதமாய்
இசைந்துளம் களித்திடும் பொங்கலிது
வாழிய பயிர்த்தொழில் வளம்பெருகி
வையகம் முழுதும் வாழியவே

– நாமக்கல் வெ. இராமலிங்கனார்



5th_STD_Tamil_Term 2.indd 20 6/4/2025 12:53:09 PM

சொல்பொருள்

எங்கணும் – எங்கும் ஏர்த்தொழில் – உழவுத்தொழில் விழலாகும் – வீணாகும்

களித்து – மகிழ்ந்து இசைந்து – ஏற்றுக்கொண்டு வையகம் – உலகம்

பாடல் பொருள்

உழவுத்தொழிலின் மேன்மையை இப்பாடல் விளக்குகின்றது. உழவின் சிறப்பால் பொங்குகின்ற பொங்கலை அனைவரும் கொண்டாடி மகிழவேண்டும் எனக் கூறுகின்றது. எங்கும் யாவரும் இன்பமாய் வாழ்வதற்கு ஏற்ற தொழில் ஏர்த்தொழிலே. உணவுப்பொருள்கள் இல்லையென்றால் நாம் வாழ்வது அரிது. பயிர்கள் விளைவிப்பதால் செல்வம் சேரும்; உணவு கிடைக்கும்; உடையும் தரும். மற்ற தொழில்களைக் கற்றுக்கொண்டாலும், பயிர்த்தொழில் இல்லையெனில் எல்லாம் வீணாகும். தங்கம், வெள்ளி போன்றவற்றை நாம் உண்ணமுடியாது. உணவுப்பயிர்களே நமக்கு உணவாக அமையும். இன்பத்தைத் தருவதும் உழவுத்தொழிலே ஆகும். பொருளில்லாதவரும் செல்வமுடையவரும் இணக்கமாய் வாழும் திருநாள் பொங்கல் நாளே. ஆகையால், ஏற்றம் தரும் ஏர்த்தொழிலின் பெருமையை உணர்ந்து அனைவரும் உழவுப் பொங்கலிட்டுப் பயிர்வளம் பெருக்குவோம்.

நூல் குறிப்பு

உழவுப் பொங்கலின் சிறப்பை விளக்கும் இப்பாடலை இயற்றியவர், நாமக்கல் வெ. இராமலிங்கனார். அவருடைய கவிதைத் தொகுப்பிலிருந்து இப்பாடல் எடுத்தாளப் பெற்றுள்ளது. இந்திய விடுதலை குறித்தும் காந்தியடிகள் குறித்தும் பல பாடல்களைப் பாடியுள்ளார். காந்தியக் கவிஞர் என்றும் போற்றப்படுகிறார். இவருடைய 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்னும் பாடல் அடி மிகவும் புகழ்பெற்றதாகும். 'தமிழன் என்றோர் இனமுண்டு' என்றும் 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்றும் அவர் பாடிய பாடல் அடிகள் என்றும் நிலைத்திருப்பவை. இவர், தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக இருந்துள்ளார்.

கற்பவை கற்றபின்

- பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க.
- உழவுத் தொழிலின் பெருமையை உணர்ந்து போற்றுக.

5th_STD_Tamil_Term 2.indd 21 6/4/2025 12:53:09 PM

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. வையகம் என்பதன் பொருள் _____

அ) ஊர் ஆ) வயல் இ) உலகம் ஈ) கிராமம்

2. நலனெல்லாம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) நலன் + எல்லாம் ஆ) நல + னெல்லாம்

இ) நலன் + னெல்லாம் ஈ) நலம் + எல்லாம்

3. நிறைந்தறம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) நிறைந்து + அறம் ஆ) நிறைந்த + அறம்

இ) நிறை + அறம் ஈ) நிறை + தறம்

4. மிகுந்திட இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் _____

அ) மகிழ்ந்திட ஆ) குறைந்திட இ) வந்திட ஈ) அதிகம்

ஆ. பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

_____ _____

_____ _____

இ. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

_____ _____

_____ _____

ஈ. பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.

_____ _____

_____ _____

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. அனைவரும் இன்பமுடன் வாழ்வதற்கு உதவும் தொழில் எது?
2. உழவுத்தொழிலால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?
3. பொங்கலை நாம் எவ்வாறு கொண்டாட வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார்?

ஊ. சிந்தனை வினா

1. 'உழவர், சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்கமுடியும்' இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

5th_STD_Tamil_Term 2.indd 22 6/4/2025 12:53:09 PM

இயல் இரண்டு

விதைத் திருவிழா

உரைநடை



காலை வழிபாட்டுக் கூட்டத்தில், தலைமையாசிரியர் கூறிய செய்தி, மாணவர்களின் உள்ளத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. காரணம், அருகிலுள்ள நடுநிலைப் பள்ளியில் விதைத் திருவிழா நடைபெறுகிறது. அடுத்த வாரம் இவர்களை அழைத்துச் செல்லப் போகிறார்கள். அன்று முழுவதும் அங்கு நடைபெறும் நிகழ்வுகளைத் தம் நண்பர்களுடன் கண்டு மகிழலாம் அல்லவா!

விதைத் திருவிழா தொடர்பான விளம்பரத் தாள்களைத் தலைமையாசிரியர் வழங்கினார்.

மாணவர்கள், விளம்பரத்தைப் படித்துப் புரிந்துகொண்டனர். விதைத் திருவிழாவுக்குச் செல்லும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கினர்.

மாணவர்கள் எதிர்பார்த்த நாளும் வந்தது. பள்ளியிலிருந்து அழைத்துச் செல்ல, வண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

5th_STD_Tamil_Term 2.indd 23 6/4/2025 12:53:10 PM



ஆசிரியர் : மாணவர்களே, நாம் விதைத் திருவிழா நடைபெறும் அரங்கை நெருங்கி விட்டோம்.

ரமணன் : எனக்கு இந்த விதைத் திருவிழா பெருமகிழ்ச்சியைத் தருகிறது. விதைகளையெல்லாம் பாருங்களேன். இத்தனை வகைகளா? வியப்பாக இருக்கிறதே!

ஆசிரியர் : ஆமாம், ரமணா! இந்த விதைகளை நாம் எப்படிச் சேகரிக்க வேண்டும், அவற்றை எவ்வாறு பாதுகாக்க வேண்டும், அவற்றை எவ்வாறு முறைப்படி பயன்படுத்த வேண்டும் என்பதையும் எழுதி வைத்துள்ளார்கள். விதைகள் எல்லாம் தரமானவையாக உள்ளன. இந்த விதைகள் மூலம் கிடைக்கும் சத்துகள், மருத்துவப் பயன்கள் பற்றியும் விளக்கமாகக் கூறுகிறார்கள். மேலும், விளக்கப் பலகைகளும் வைத்திருப்பது, மிகவும் பயனுள்ள வகையில் உள்ளது.

மணிமொழி : நெல் விதைகளின் பெயர்களைப் பாருங்களேன்!

ஆசிரியர் : நாட்டு நெல் ரகங்களான மாப்பிள்ளைச் சம்பா முதலான பல்வேறு மரபு நெல் விதைகள், நாட்டுக்கம்பு, குதிரைவாலி, சோளம் போன்ற சிறு தானியங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் வேர்க்கடலை, உளுந்து, முந்திரி, நாட்டுப்பருத்தி விதைகள், சிறுதானிய விதைகள் மட்டுமல்லாமல் அரிய மூலிகைச் செடிகளும் வைக்கப்பட்டுள்ளன.

5th_STD_Tamil_Term 2.indd 24 6/4/2025 12:53:10 PM

நிலவளத்தைக் காப்போம்! நீர்வளத்தைப் பெருக்குவோம்! பூமித்தாயைப் போற்றுவோம்!

இயற்கை வேளாண்மையின் இன்றியமையாமை

350க்கும் மேற்பட்ட பாரம்பரிய விதைகள் சேகரிப்பு

- இயற்கை வேளாண் பொருள்கள்
- இயற்கை இடு பொருள்கள்
- இயற்கைப் பருத்தி ஆடைகள்
- இயற்கைக் கைவினைப் பொருள்கள்
- மண்ணில் மட்கக்கூடிய பொருள்கள்
- மண்ணின் ஊட்டச்சத்து
- சூழலியல்
- தோட்டக்கலை
- பண்ணை அமைப்பு
- உணவுப் பாதுகாப்பு
- இயற்கை வேளாண்மை
- நீர் மேலாண்மை

அனைவரையும் சுண்டி இழுக்கும் அரங்குகள்

மாலா : இவற்றையெல்லாம் பார்ப்பது நமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகக் கருதுகிறேன்.

பாரதி : மணிமொழி அதோ, அங்கே பார்! அந்த அரங்கில் இயற்கை இடுபொருள்கள், இயற்கை உணவுகள், வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கான குறிப்புகளும் தருகிறார்கள். வாங்கவாங்க, என்ன சொல்கிறார்கள் எனக் கேட்போம்.

ரமணன் : பாதிப்பு என்று இந்த அரங்கத்தில் எழுதியிருக்கே, என்னவாக இருக்கும்?

ஆசிரியர் : இரசாயன விதைகள், இரசாயனப் பூச்சி மருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளையே பாதிப்பு என்று சொல்கிறார்கள். இதனால், மண்ணின் தன்மை கெடுகிறது. இதனைத் தடுக்கும் வகையில் இயற்கை முறையில் வேளாண்மை செய்ய வேண்டும் என்பதே அதன் பொருள்.

ரெஹானா : பாரதி, இங்கே பார்! சமையல் பாத்திரங்கள்.

ஆசிரியர் : இவை சாதாரணப் பாத்திரங்கள் அல்ல; பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட செம்பு, மரத்தாலான சமையல் பாத்திரங்கள், கருவிகள். இவற்றையும் நாம் பார்வையிடுவதற்காக வைத்துள்ளனர்.

ரெஹானா : ஓ!

ஆசிரியர் : மாணவச் செல்வங்களே, அனைத்துக் கூடங்களையும் பார்த்தீர்களா? இந்த விதைத் திருவிழா, உங்களுக்கு மிகுந்த பயனைத் தந்திருக்குமென நினைக்கிறேன்.

(மாணவர்கள் அனைவரும் "ஆமாம், ஐயா!" என்று கூறுகின்றனர்)

5th_STD_Tamil_Term 2.indd 25 6/4/2025 12:53:10 PM



பாரதி : ஐயா! அங்கே பாருங்கள். இயற்கை உணவுப்பொருள்கள் என்று எழுதப்பட்ட அந்த அரங்கத்தில் எல்லாரும் ஏதோ சுவைக்கிறார்கள். நாமும் அங்கே செல்லலாமா?

ஆசிரியர் : விழாவிற்கு வந்தவர்களுக்கு இயற்கை முறையில் தயாரித்த உணவுகளான இனிப்பு உருண்டை, பிட்டு, பொங்கல், கேழ்வரகுக் கூழ், கேழ்வரகு அடை, முளைகட்டிய பாசிப்பயறு, நவதானியச் சுண்டல். கொண்டைக்கடலை, தட்டைப்பயறு, மொச்சை போன்றவற்றை வழங்குகிறார்கள்.

ஆசிரியர்களுடன் மாணவர்களும் அந்த அரங்கில் நுழைந்தார்கள். இயற்கை உணவுகளைச் சுவைத்து மகிழ்ந்தார்கள்.

"இந்த **விதைத் திருவிழா** எங்களுக்குப் பயனுள்ளதாக இருந்தது. இந்த நாள் எங்களுக்கு இனிய நிகழ்வாகவும் அமைந்தது. இங்குப் பார்த்தவற்றை நாங்கள் அனைவருக்கும் எடுத்துச் சொல்வோம்" என்று மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சி பொங்கக் கூறினார்கள்; அப்பள்ளி தலைமையாசிரியருக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றி கூறினர். மீண்டும் தங்களுடைய பள்ளிக்குத் திரும்பிச் சென்றனர்.

5th_STD_Tamil_Term 2.indd 26 6/4/2025 12:53:11 PM

கற்பவை கற்றபின்

- இயற்கை உணவுப்பொருள்களின் படங்களைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குக.
- உங்கள் பள்ளியில் நடைபெறும் ஏதேனும் ஒரு விழாவுக்கு மாதிரி அழைப்பிதழ்/ விளம்பரத்தாள் உருவாக்கி மகிழ்க.
- உங்கள் பள்ளி நிகழ்வொன்றைச் செய்தியாக்கி எழுதுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

1. ரகங்கள் இச்சொல் குறிக்கும் பொருள் _____

அ) பாடல்கள்
ஆ) இசைவு
இ) வகைகள்
ஈ) உழவு

2. நவதானியம் இச்சொல்லுக்குரிய பொருள் _____

அ) நல்ல தானியம்
ஆ) தரமான தானியம்
இ) நவீன தானியம்
ஈ) 9 வகைத் தானியங்கள்

3. பழங்காலம் இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் _____

அ) பழைய காலம்
ஆ) பிற்காலம்
இ) புதிய காலம்
ஈ) இடைக்காலம்

4. விளம்பரத்தாள்கள் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) விளம்பர + தாள்கள்
ஆ) விளம்புரத்து + தாள்கள்
இ) விளம்பரம் + தாள்கள்
ஈ) விளம்பு + தாள்கள்

5. தோட்டம் + கலை இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) தோட்டம்கலை
ஆ) தோட்டக்கலை
இ) தோட்டங்கலை
ஈ) தோட்டகலை

5th_STD_Tamil_Term 2.indd 27 6/4/2025 12:53:11 PM

ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1) வழிபாடு + கூட்டம் – _____

2) வீடு + தோட்டம் – _____

இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1) அழைப்பிதழ் = _____ + _____

2) விதைத்திருவிழா = _____ + _____

ஈ. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1) இரசாயன உரங்களால் _____ தன்மை கெடுகிறது.

2) விதைகள் _____ ஆனவையாக இருத்தல் வேண்டும்.

3) விழாவில் அளிக்கப்பட்டவை _____ உணவுகள்.

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. மாணவர்களை எங்கே அழைத்துச் செல்வதாகத் தலைமையாசிரியர் கூறினார்?

2. விளம்பரத்தாளில் என்ன செய்தி இருந்தது?

3. 'பாதிப்பு' என்று எழுதப்பட்ட அரங்கத்தில் என்ன செய்தி சொல்லப்பட்டது?

ஊ. சிந்தனை வினா

1. செயற்கை உரங்கள், மண்ணின் வளத்தைக் கெடுக்கும் எனில், அதற்கு மாற்றாக நாம் என்ன செய்ய வேண்டும்?

5th_STD_Tamil_Term 2.indd 28 6/4/2025 12:53:11 PM

பின்வரும் பாடப் பகுதியை உரிய ஒலிப்புடன் பொருள் விளங்கவும் விரைவாகவும் படித்துக் காட்டுக.

"இந்த விதைத் திருவிழா எங்களுக்குப் பயனுள்ளதாக இருந்தது. இந்த நாள் எங்களுக்கு இனிய நிகழ்வாகவும் அமைந்தது. இங்குப் பார்த்தவற்றை நாங்கள் அனைவருக்கும்எடுத்துச்சொல்வோம்"என்றுமாணவர்கள்அனைவரும்மகிழ்ச்சி பொங்கக் கூறினார்கள்; அப்பள்ளி தலைமையாசிரியருக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றி கூறினர். மீண்டும் தங்களுடைய பள்ளிக்குத் திரும்பிச் சென்றனர்.

படித்த பகுதியின் மையக்கருத்தை ஓரிரு வரிகளில் உங்கள் சொந்த நடையில் எழுதுக.

வண்ணமிடப்பட்ட சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.

_____ _____ _____

_____ _____ _____

_____ _____ _____

5th_STD_Tamil_Term 2.indd 29 6/4/2025 12:53:11 PM

இயல் இரண்டு

எது சிறந்தது?

துணைப் பாடம்

பல ஆண்டுகளுக்கு முன் மங்கையர்க்கரசி என்பவர் தம்முடைய நாட்டை சிறப்பாக ஆண்டு வந்தார். அவர், நீதியும் நேர்மையும் மிக்கவராக விளங்கினார். அவர் ஆட்சியில் மக்கள் குறைவின்றி வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள், கிராமத் தலைவர் ஒருவர், அரசியிடம் ஒரு வழக்கைக் கொண்டு வந்தார். அவருடன் நான்கு பேர் அரண்மனைக்கு வந்தனர். அரசியை வணங்கிய கிராமத் தலைவர், தம் வழக்கை எடுத்துரைத்தார்.

"எங்கள் கிராமத்தில் செல்வந்தர் ஒருவர், ஒரு போட்டியை அறிவித்தார். அரிய சாதனை புரிபவருக்கு நூறு பொற்காசுகள் கொண்ட பொற்கிழி ஒன்றைப் பரிசளிப்பதாக அறிவித்தார். அந்தப் பொற்கிழியைப் பெறுவதற்கு இவர்கள் நால்வரும் போட்டி போட்டனர். நால்வருடைய சாதனைகளைக் கேட்டும் யாருடைய சாதனை சிறந்தது என்று முடிவு செய்ய எங்களால் முடியவில்லை. பொற்கிழியை நால்வருக்கும் சரிசமமாகப் பிரித்துக் கொடுக்க முடிவெடுத்தோம்" என்றார் கிராமத் தலைவர்.



5th_STD_Tamil_Term 2.indd 30 6/4/2025 12:53:12 PM

"சரிதானே! அதில் என்ன சிக்கல்" என்றார் அரசி. "ஆனால், இந்நால்வரும் அதற்கு உடன்பட மறுக்கின்றனர். ஒவ்வொருவரும் தங்கள் சாதனையே பெரியது என்று கூறுகின்றனர். பொற்கிழி முழுமையாகத் தங்களுக்கே சேர வேண்டும் என்று விரும்புகின்றனர். அதனால், நீங்கள்தான் சரியான தீர்ப்பளிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார் அந்தக் கிராமத் தலைவர்.

அரசியார் அந்நால்வரையும் பார்த்தார்., "ஒவ்வொருவராக உங்கள் சாதனையைச் சொல்லுங்கள்," என்று கேட்டார்.


முதலில், முருகேசன் என்பவர் தம் சாதனையைச் சொல்லத் தொடங்கினார். "நான் ஒரு வியாபாரி. மளிகைக் கடை வைத்துள்ளேன். வியாபாரத்தில் முழுக்கவனத்தோடு ஈடுபட்டிருந்தபோது, தெருவில் வந்த மாடு, ஒரு சிறுமியை ஆவேசமாக முட்டுவதற்குப் பாய்ந்தது. நான் உடனே ஓடிச்சென்று அந்தச் சிறுமியைக் காப்பாற்றினேன். இத்தனைக்கும் அவள் தந்தைக்கும் எனக்கும் நிலத்தகராறு உண்டு. அப்படியிருந்தும் அவளை நான் காப்பாற்றினேன். அதைக் கண்ட ஊர்மக்கள் என்னைப் பாராட்டினார்கள். அதனால், பொற்கிழியை எனக்கே கொடுக்க வேண்டும்" என்று சொன்னார் முருகேசன்.

இரண்டாவதாக, கண்ணன் என்பவர் தம் சாதனையைச் சொல்லத் தொடங்கினார். "நான் ஒரு கவிஞன். பல பாடல்களும் கவிதைகளும் இயற்றியுள்ளேன். ஒரே இரவில், உலகம் வியக்கும்படியாக நூறு செய்யுள்களைப் படைத்துள்ளேன். மக்கள் எல்லாரும் அதை விரும்பிப் படிக்கிறார்கள். ஒரே இரவில் இப்படி ஒரு காவியத்தைப் படைத்தது ஓர் இலக்கியச் சாதனை அல்லவா? எனவே, பொற்கிழியைப் பெற முற்றிலும் தகுதி உள்ளவன் நான்." இவ்வாறு தன்னிலை விளக்கம் அளித்தார் கவிஞர்.

மூன்றாவதாக வந்தார், கல்தச்சர் கந்தசாமி. அவர்தம் சாதனையைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். "கரடுமுரடான பாறைகளை வெட்டிக் கொண்டுவந்து, அழகிய சிலையாகவும் எழிலான தூண்களாகவும் செய்யும் கல்தச்சன் நான். சிற்றுளியைக் கொண்டு பாறையைக் குடைந்து குடைவரைக் கோவில்கள். நான் செதுக்கிய குகைக் கோவிலைக் கண்டு வியந்து பாராட்டாதவர்களே இல்லை. எனவே, பொற்கிழியை எனக்குக் கொடுப்பதே பொருந்தும்!" என்றார் கல்தச்சர் கந்தசாமி.

நான்காவதாக முதியவர் பொன்னுசாமி வந்தார். அவர், "நான் ஓர் ஏழை விவசாயி. என் மூதாதையர் வழியில் எனக்குக் கிடைத்த ஒரு காணி நிலத்தை நன்கு உழுது பயிரிட்டுப் பிழைத்து வருகிறேன். என் மனைவி காலமாகிவிட்டாள். என் மகளும் நானும்தான் வயலில் உழைத்து வாழ்க்கை நடத்துகிறோம். இருவரும் பாடுபட்டு வேலை செய்ததால், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மூன்று மடங்கு விளைச்சல் கண்டுள்ளது. என் குடும்பத்திற்குத் தேவையான நெல் போக, மீதியைப் பத்துக் குடும்பங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தேன். ஒரு காணி நிலத்தைக் கொண்டு பத்துக் குடும்பங்கள் வாழ்கின்றன" என்றார் முதியவர்.

5th_STD_Tamil_Term 2.indd 31 6/4/2025 12:53:12 PM



மங்கையர்க்கரசி சற்றே யோசித்தார். பிறகு தம் தீர்ப்பைக் கூறலானார்.

நீங்கள் ஒவ்வொருவரும் சிறப்பான செயலையே செய்துள்ளீர்கள். முதிய விவசாயி, தமது ஒருகாணி நிலத்தில் மும்மடங்கு நெல் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளார். உண்மையில் இது பெரிய சாதனை. எந்த அளவிற்குப் பாடுபட்டு உழைத்திருந்தால், இந்த அளவு பலன் காண முடியும்! அவரது உழைப்பால், மேலும் பத்துக் குடும்பங்களின் பசியைப் போக்கியுள்ளார். எனவே, பொற்கிழி பெறத் தகுதியானவர் இவர்தாம். இவருக்கே பொற்கிழியை வழங்க ஆணையிடுகிறேன்" என்று தீர்ப்பை வழங்கினார் மங்கையர்க்கரசி. அவரது தீர்ப்பைக் கேட்ட, எல்லாரும் சரியான தீர்ப்பு என்று மகிழ்ந்தனர்.

கற்பவை கற்றபின்

- எது சிறந்தது? என்ற கதையை நாடகமாக நடித்துக்காட்டுக.

மதிப்பீடு

அ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. அரசியிடம் கிராமத் தலைவர் கொண்டுவந்த வழக்கு யாது?
2. விவசாயியின் சாதனைதான் உயர்ந்தது என்று அரசி கூறக் காரணம் என்ன?

ஆ. சிந்தனை வினா

1. அரசி கூறிய தீர்ப்பு சரியா? உங்களுடைய கருத்து என்ன?

5th_STD_Tamil_Term 2.indd 32 6/4/2025 12:53:14 PM

எது சிறந்தது? என்ற கதையில் நீங்கள் விரும்பும் கதை மாந்தர் யார்? ஏன்? ஓரிரு வரிகளில் எழுதுக.

இக்கதையின் நிகழ்வுகள் / முடிவை மாற்ற விரும்பினால் எவ்வாறு மாற்றுவீர்கள்?

இக்கதைக்கு நீங்கள் விரும்பும் தலைப்பு

கையெழுத்துப் பயிற்சி

கதையிலிருந்து ஏதேனும் இரண்டு தொடர்களைப் பார்த்து, உரிய இடைவெளி விட்டு, நிறுத்தக்குறிகளுடன் தெளிவாக எழுதுக.

5th_STD_Tamil_Term 2.indd 33 6/4/2025 12:53:14 PM

கற்கண்டு

அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி

தடதட வென ஓடி வருகிறான் தேனிசையின் தம்பி.

"அடடே, செல்வமா? **வா! வா!** ஏன் இப்படி ஓடி வருகிறாய்?" என்றாள் தேனிசை.

மேற்கண்ட தொடர்களில் சில சொற்கள் ஒருமுறைக்கு மேல் திரும்பத் திரும்ப வந்துள்ளன. அவை தடதட, வா! வா!

இவற்றை இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் என்று வகைப்படுத்தலாம்.

தடதட என்பதைப் பிரித்தால் தட என்பது பொருள் தராது. இது இரட்டைக்கிளவி ஆகும்.

வா! வா! என்பதைப் பிரித்தால் வா என்பது பொருள் தரும். இது அடுக்குத்தொடர் ஆகும்

இரட்டைக்கிளவி

- இரட்டைச் சொல்லாக வரும்.
- தனித்தனியே பிரித்தால் பொருள் தராது.
- இரண்டு முறைக்கு மேல் அடுக்கி வராது.

அடுக்குத்தொடர்

- ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வரும்.
- தனித்தனியே பிரித்தாலும் பொருள் தரும்.
- இரண்டு அல்லது அதற்குமேல் அடுக்கி வரும்.

இரட்டைக்கிளவி	அடுக்குத்தொடர்
படபட	வா! வா!
கலகல	போ! போ!
பளபள	வாழ்க வாழ்க
வழவழ	பாம்பு பாம்பு
தடதட	தீ...தீ...தீ...
கடகட	ஓடு ஓடு

5th_STD_Tamil_Term 2.indd 34 6/4/2025 12:53:14 PM

கற்பவை கற்றபின்

- அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி வருமாறு தொடர்களை உருவாக்கி எழுதுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

1. காலில் காயம் பட்ட இடத்தில் _____ என வலித்தது.

அ) கடகட ஆ) விண்விண்

இ) படபட ஈ) கணகண

2. குயில் _____ எனக் கூவியது.

அ) கீச்கீச் ஆ) கூகூ

இ) கொக்கொக் ஈ) பக்பக்

3. மணமக்களை _____ என வாழ்த்தினர்.

அ) வருக! வருக! ஆ) வாழ்க! வாழ்க!

இ) வீழ்க! வீழ்க! ஈ) வளர்க! வளர்க!

ஆ. சொற்களை உரிய கட்டத்தில் எழுதுக.

வாழ்க வாழ்க, மளமள, சரசர, வருக வருக, கடகட,
வெற்றி வெற்றி, கணகண, வேண்டாம் வேண்டாம்.

இரட்டைக்கிளவி	அடுக்குத்தொடர்

5th_STD_Tamil_Term 2.indd 35 6/4/2025 12:53:14 PM

இ. படத்தைப் பார்த்து இரட்டைக்கிளவி / அடுக்குத்தொடர் வருமாறு தொடர்கள் எழுதுக.



5th_STD_Tamil_Term 2.indd 36 6/4/2025 12:53:15 PM

பின்வரும் பாடப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மூன்றாவதாக வந்தார், கல்தச்சர் கந்தசாமி. அவர்தம் சாதனையைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். "கரடுமுரடான பாறைகளை வெட்டிக் கொண்டுவந்து, அழகிய சிலையாகவும் எழிலான தூண்களாகவும் செய்யும் கல்தச்சன் நான். சிற்றுளியைக் கொண்டு பாறையைக் குடைந்து குடைவரைக் கோவில்கள். நான் செதுக்கிய குகைக் கோவிலைக் கண்டு வியந்து பாராட்டாதவர்களே இல்லை. எனவே, பொற்கிழியை எனக்குக் கொடுப்பதே பொருத்தம்!" என்றார் கல்தச்சர் கந்தசாமி.

படித்த பகுதியில் இடம்பெற்றுள்ள...

பெயர்ச் சொற்கள்	
வினைச் சொற்கள்	
வருணனைச் சொற்கள்	

படித்த பகுதியில் உள்ள மயங்கொலிச் சொற்களை எடுத்து எழுதுக.

ல	ள	ழ
கல்தச்சர்	செய்துள்ளேன்	அழகிய
----------	----------	----------
----------	----------	----------
----------	----------	----------

5th_STD_Tamil_Term 2.indd 37 6/4/2025 12:53:15 PM

மொழியை ஆள்வோம்

அ. கேட்டல்

- நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டு மகிழ்க.

ஆ. பேசுதல்

- அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவிகளைப் பயன்படுத்தித் தொடர் அமைத்துப் பேசுக.

இ. படித்தல்

- செய்தித்தாளில் வந்துள்ள உழவுத்தொழில் பற்றிய செய்திகளை வகுப்பில் படித்துக்காட்டுக.
- வாய்விட்டுப் படித்துக் காட்டுக.

அகலத் தூறிடு

ஆழ்துளை நீக்கு

இருகரை சமன்செய்

ஈராறு இணை

உப்புநீர் வடி

ஊற்றுநீர் பெருக்கு

எரிபொருள் சேமி

ஏரியைக் காத்தல் செய்

ஐம்பொறி அடக்கிடு

ஒன்றாக்கு உலகெலாம்

ஓங்கிடும் வையகம்

ஔடதம் நீர்

ஈ. எழுதுதல்

- கணினி, தொலைக்காட்சியில் நீங்கள் பார்த்த, உங்களுக்குப் பிடித்த, பயனுள்ள நிகழ்ச்சி குறித்துச் சில தொடர்கள் எழுதுக.

5th_STD_Tamil_Term 2.indd 38 6/4/2025 12:53:15 PM

அன்றாட நிகழ்வுகளை நாள் குறிப்பாக எழுதுக.

கிழமை	நிகழ்வு
ஞாயிறு	இன்று மாலை சிறுவர் இதழில் கதைகள் படித்தேன். பாட்டியிடம் கதைகளைப் பகிர்ந்து கொண்டேன்.
திங்கள்	செடிக்குத் தண்ணீர் ஊற்றினேன். செடியில் ஒரு மொட்டு வளர்ந்திருந்தது. அதைப் பார்த்த எனக்கு மிகவும் மகிழ்சியாக இருந்தது.
செவ்வாய்	
புதன்	
வியாழன்	
வெள்ளி	
சனி	

5th_STD_Tamil_Term 2.indd 39 6/4/2025 12:53:15 PM



மொழியோடு விளையாடு

1. சொற்களை உரிய வரிசையில் எழுதித் தொடராக்குக.

1. பட்டம் தேடி ஆடிப் விதை – ஆடிப்பட்டம் தேடி விதை

2. தேடு ஏரைத் தேடின் சீரைத் – _____

3. உழுவதை அகல விட உழு ஆழ – _____

2. தொகைச்சொற்களை விரித்து எழுதுக.

முத்தமிழ் – _____, _____, _____.

நாற்றிசை – _____, _____, _____, _____.

ஐந்திணை – _____, _____, _____, _____, _____.

அறுசுவை – _____, _____, _____, _____, _____, _____.



நிற்க அதற்குத் தக

- இயற்கை வளங்களைப் பாதுகாக்க முயல்வேன்.

செயல்திட்டம்

உழவுத் தொழில் சார்ந்த பணிகளைக் கேட்டறிந்து எழுதித் தொகுக்க.




5th_STD_Tamil_Term 2.indd 40 6/4/2025 12:53:15 PM

வரைபடத்தைப் படித்தறிந்து வினாக்களுக்கு விடை தருக.

பருவத்தேர்வு – மதிப்பெண்கள்

பெயர் : குறள்மதி வகுப்பு : ஐந்து



வினாக்கள்:

1. குறள்மதி நூறு மதிப்பெண் பெற்றுள்ள பாடம் எது? – _____

2. எந்தப் பாடத்திற்கு 95 மதிப்பெண் கிடைத்துள்ளது? – _____

3. ஒரே மதிப்பெண் கிடைத்துள்ள பாடங்கள் எவை? – _____

4. குறள்மதி பெற்ற மொத்த மதிப்பெண்களைக் குறிப்பிடுக. – _____

5. குறள்மதி சமூக அறிவியல் பாடத்தில் பெற்ற மதிப்பெண் – _____

5th_STD_Tamil_Term 2.indd 41 6/4/2025 12:53:15 PM

அகரமுதலி

1.	அரம்	–	வாளைக் கூர்மையாக்கும் கருவி
2.	இகழ்ச்சி	–	இகழ்தல்
3.	இசைந்து	–	ஏற்றுக்கொண்டு
4.	எங்கணும்	–	எங்கும்
5.	ஏர்த்தொழில்	–	உழவுத்தொழில்
6.	களித்து	–	மகிழ்ந்து
7.	காணி நிலம்	–	நூறு குழி கொண்ட நில அளவு
8.	காவியம்	–	கதையோடு கூடிய நீண்ட கவிதை
9.	நயன்	–	நேர்மை
10.	நவதானியம்	–	அவரை, உளுந்து, எள், கடலை, கொள்ளு, கோதுமை, துவரை, நெல், பாசிப்பயறு ஆகிய ஒன்பது தானியங்கள்
11.	நன்பால்	–	நல்ல பால்
12.	நன்றி	–	நன்மை
13.	நாகரிகம்	–	குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் வாழும் மக்களின் சமூக வாழ்க்கை முறை
14.	பறைசாற்றும்	–	பலரும் அறியும்படி அறிவிக்கும்
15.	பாடறிவார்	–	பிறரின் இயல்பு புரிந்து நடப்பவர்
16.	பாதிப்பு	–	விளைவு
17.	புக்கு	–	புகுந்து
18.	பெருஞ்செல்வம்	–	மிகுந்த செல்வம்
19.	பொற்கிழி	–	பொற்காசுகள் முடிந்த துணி
20.	போல்வர்	–	போன்றவர்
21.	மாய்வது	–	அழிவது
22.	ரகங்கள்	–	வகைகள்
23.	விழலாகும்	–	வீணாகும்
24.	வையகம்	–	உலகம்

5th_STD_Tamil_Term 2.indd 42 6/4/2025 12:53:15 PM

கற்றல் விளைவுகள்

கேட்டல்	பேசுதல்	படித்தல்	எழுதுதல்
• விழிப்புணர்வுப் பாடல்கள், சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டுப் புரிந்துகொள்வர். • வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு, விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்துகொள்வர். • எளிய செயல் திட்டங்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர்.	• பல்வேறு பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவர். • அறிந்த எளிய தலைப்புகளில் இயல்பாகவும் தங்கு தடையின்றியும் பேசுவர். • கேட்ட/படித்த பல்வேறு இலக்கியங்கள் பற்றிப் பேசுதல், சொல்லாடல், பகுப்பாய்தல் செய்வர். • பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுவர். • தம்மைச் சுற்றி நிகழும் பல்வேறு நிகழ்வுகளுக்கு எதிர்வினை புரிவர். • கேட்கும்/படிக்கும் கதை, கவிதை, செய்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துவர்.	• செய்தி, நிகழ்ச்சி அறிவிப்பு, நிகழ்ச்சிநிரல், துண்டறிக்கை, அழைப்பிதழ்கள், வெளியீடுகள் ஆகியவற்றைப் படித்துப் பொருளுணர்வர். • சொற்களின் பொருண்மைகளை அகரமுதலிகளில் கண்டறிவர். • பல்வேறு துறை சார்ந்த சொற்களைப் புரிந்துகொண்டு பொருத்தமான இடங்களில் பயன்படுத்துவர்.	• உரிய வடிவத்தில் முறையான இடைவெளிவிட்டு எழுதுவர். • எளிய உரைப்பகுதி, கதை, இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து கருத்து தெரிவிப்பர். அவற்றிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவர். • சுற்றுப்புறத்தில் நடக்கும் நிகழ்வுகளை உற்றுநோக்கி அவைசார்ந்த தமது கருத்துகளை எழுத்தில் பதிவு செய்வர் • பல்வேறு சூழல்களுக்கு ஏற்ப எழுதும்போது, மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு, பொருத்தமான சொற்கள், தொடர்கள், பழமொழிகள், நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்திக் கவனமாக எழுதுவர். • கற்பனையின் அடிப்படையில் கதைகள், பாடல்கள், கவிதைகள், கடிதங்கள் எழுதுவர். • செய்யுள்/ பாடல்களை அடிபிறழாமல் எழுதுவர். • நாட்குறிப்பு எழுதுவர்.

நடைமுறை இலக்கணமறிதல்	கற்கக் கற்றல்	சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறனும்
